**செய்தி வெளியீடு எண்: 293** **நாள்: 16.05.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (16.5.2012) தலைமைச் செயலகத்தில், இராணுவப் பணியின் போது வீர தீரச் செயல் புரிந்தமைக்காக ‘‘சௌரிய சக்ரா’’ விருது பெற்ற மேஜர் எஸ். கார்த்திக் ராஜா அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கி கௌரவித்தார்கள்.

முப்படைப் பணியில் வீர தீரச் செயல்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறும் தமிழகத்தைச் சேர்ந்த படை வீரர்கள், தமிழக அரசால் பணமுடிப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முப்படைப் பணியில் வீர தீரச் செயல்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பணமுடிப்பை 24.10.2011 அன்று உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள். அதன்படி, ‘‘சௌரிய சக்ரா’’ விருது பெற்றவர்களுக்கான பணமுடிப்பு 45 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

மணிப்பூர் மாநிலம், துபால் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருந்ததற்கான தகவல் பெறப்பட்டதின் பேரில், மேஜர் எஸ். கார்த்திக் ராஜா ஒரு படையுடன் அங்கு சென்று தனது உயிரைப் பற்றி கவலைப்படாமல் தீவிரவாதிகளோடு சண்டையிட்டு தனது சாதுரியமான செயலால் 5 தீவிரவாதிகளை அழித்ததுடன், போர் தளவாடங்களையும், பல முக்கிய ஆவணங்களையும் கைப்பற்றினார். இவரது இவ்வீர தீரச் செயலைப் பாராட்டி மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் மேஜர் எஸ். கார்த்திக் ராஜா அவர்களுக்கு ‘‘சௌரிய சக்ரா’’ விருது வழங்கினார்கள். ‘‘சௌரிய சக்ரா’’ விருது இந்திய இராணுவத்தில் தீரத்துடனும், துணிவுடனும் தன்னுயிரை தியாகம் செய்யும் முனைப்பில் பணிபுரிவோருக்கும், தீவிரவாத தடுப்பு தாக்குதலின் போது தீரத்துடன் பணிபுரியும் படைவீரர்களுக்கும் வழங்கப்படுகிறது. ‘‘சௌரிய சக்ரா’’ விருது போர்க்கால விருதான ‘‘வீர சக்ரா’’ விருதுக்கு இணையாக கருதப்படுகிறது.

இராணுவப் பணியின் போது வீர தீரச் செயல் புரிந்தமைக்காக ‘‘சௌரிய சக்ரா’’ விருது பெற்ற மேஜர் எஸ். கார்த்திக் ராஜா அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், உயர்த்தப்பட்ட பணமுடிப்பான 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கி கௌரவித்தார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 16.5.2012